# சிலப்பதிகாரம் தந்திடும் தமிழனின் கலைச் சிறப்பும் அதன் அறிவியல் நுட்பங்களும்

**முனைவர் இரா.வீரமணி**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**டாக்டர் என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி**
**காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர்-641048.**

3

**ஆய்வு நோக்கம்**

தமிழன் இயல்பிலேயே ஞானம் படைத்தவன். புத்திக் கூர்மையும் பன்னோக்குப் பார்வையும் நிறைந்தவன். அறிவியல் வளர்ச்சி முழுமை பெற்றிடாத காலகட்டத்திலேயே விஞ்ஞானத்தைத் தம் மெய்ஞ்ஞானத்தால் கண்டறிந்தவன். உலகம் இன்றளவும் நம்மை வியந்து பார்த்திடும் வண்ணம் எல்லாக் கலைகளிலுமே தலைசிறந்து விளங்கியிருப்பது வியப்பிற்கும் ஆச்சரியத்திற்கும் உரியதே. சிலப்பதிகாரம் காப்பியங்களில் தலைசிறந்த ஒன்றாகத் தமிழனின் வாழ்வியலை அப்படியே படம் பிடித்துக் காட்டும் கருவூலமாகும். அத்தகைய சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் கலைச் சிறப்பை வெளிக்கொணர்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழன் கலைகளில் தம்முடைய நாட்டத்தினைச் செலுத்தி வாழ்ந்து இருக்கிறான். கலைகளின் வாயிலாகத் தம் வாழ்க்கையை மென்மேலும் மெருகூட்டியிருக்கிறான். அழகியல் உணர்வும் கலைநுட்பமும் ஒருங்கே அமையப் பெற்றவர்களால் மட்டுமே கலைஞனாகவும், கலையை வளர்த்தெடுப்பவர்களாகவும் திகழ முடியும். தமிழர்கள் கலைகளில் பல நுட்பங்களைத் தம் கூர்த்த மதியால் கண்டறிந்திருக்கிறார்கள். அத்தகைய கலைகளின் பெட்டகமாகத் திகழுகின்ற சிலம்பில் தமிழனின் கலை பற்றிய செய்திகள் காப்பியம் முழுமையுமே விரவிக் கிடக்கின்றன. அத்தகைய காப்பியத்திலிருந்து தமிழனின் கலைச் சிறப்பைப் பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**கலை பற்றிய விளக்கம்**

முற்காலத்திலிருந்து தற்போது வரை அறக்கருத்துக்களையும் ஒழுக்கம் சார்ந்த உண்மைக் கருத்துக்களையும் பெரும் உணர்ச்சியோடு கூறத்தகுந்த இலக்கியங்களை உயர்தர இலக்கியங்கள் எனக் கூறமுடியும். அந்த இலக்கியங்கள் எத்தகைய உணர்வு நிலைகளை வெளிப்படுத்துகின்றது என்று தொல்காப்பியர்,

**”இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக்கூட்டம் காணுங்காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே”**[1]

இவ்வாறு இன்பம், பொருள், அறம் என்று கூறப்பெற்ற உணர்வுகள் மேலோங்கி வெளிப்படுதல் பற்றித் தொல்காப்பியம் கூறுகிறது. இவ்வுணர்வுகள் அனைத்தும் கலைகளின்

வெளிப்பாடுகளே ஆகும். கலைக் கண் இல்லாமல் இவ்வுணர்வுகள் மனித மனத்திலிருந்து ஊற்றெடுக்காது. இதனைக் கலையின் வெளிப்பாடாகவே அறிந்து கொள்ள முடியும். கலையின் வெளிப்பாடுகளாக மனித மனத்தின் மெல்லிய உணர்வுகளைத் தமிழின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. கலையை வெகுவாக ரசிக்கின்ற ஒருவனால் மட்டுமே இவ்வுலகில் எதைப் படைக்க முயன்றாலும் ரசனையோடு படைக்க முடியும். இவ்வுலகமே கலையின் வெளிப்பாடு. குழந்தை பிறந்ததிலிருந்து அதனை வளர்த்து ஆளாக்கி விடுதல் வரையும் அனைத்துமே கலையின் வெளிப்பாடு என்றே கூற முடியும். அவ்வாறு சிலம்பில் அமையப் பெற்றுள்ள கலைகளின் அழகியல்புகள் ரசிப்பிற்குரியதே ஆகும்.

**சிலம்பு கூறும் ஏழடுக்கு மாளிகை**

யோகபூமி என அனைவராலும் அழைக்கப்படும் சிறந்த பகுதியாகத் திகழ்ந்தது புகார் நகரம். வணிகப் பெருமக்கள் மிகுதியாக வாழ்ந்து வருகின்ற இடம் பூம்புகார். மிகுந்த வளம் மிகுந்த பகுதியாகும். கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட செல்வமும் தரை வழியாகப் பெறப்பட்ட பொருட்களும் முழுமையாக எல்லா இடங்களிலும் குவிந்திருந்தன. அத்தகைய புகார் நகரில் குல ஒழுக்கத்தில் சிறந்து விளங்குகின்ற இயல்பினை உடையவர்கள் வணிகர்கள். மிகப் பெரிய மலர் போன்ற கண்களைப் பெற்றிருந்த கண்ணகியும் கோவலனும் ஏழடுக்கு மாளிகையில் அதற்கு இடைப்பட்டு இருக்கக்கூடிய நான்காம் அடுக்கில் மகிழ்ந்திருந்தனர்.

இதனை,

**”கயமலர்க் கண்ணியும் காதல் கொழுநனும்**

**மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை**
**நெடுநிலை மாடத்து இடைநிலத் திருந்துழிக்**
**கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை**

**அரும்பு பொதி அவிழ்ந்த சுரும்பு இமிர்தாமரை”**[2]

இவ்வாறு இளங்கோவடிகள் தமது கற்பனைக் கலைத் திறத்தை எடுத்தியம்பியுள்ளார்.

**தென்றலின் மென்சுகம்**

ஒன்று சேர்ந்த மலர்களின் சுகந்தத்தை நுகர்ந்தால் மனிதனின் மனமானது இயல்பிலேயே ரசாயன மாற்றத்திற்கு உட்பட்டு மனம் மிக மகிழ்வடையும். இக்கருத்தானது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். இவற்றைக் கலையுணர்வு மேலோங்கிடும் விதமாக இளங்கோவடிகள் சிலம்பில் மலர்களின் கூட்டிணைவால் உருவான மென்சுகத்தைக் கோவலனும் கண்ணகியும் உணர்ந்த நிலையைப் பற்றிக் கூறுகிறார். செங்கழுநீர், சேதாம்பல், இதழ் ஒடியாத குவளை, அரும்பு அவிழ்ந்து வண்டுகள் ஒலிக்கும் தாமரை போன்ற நீர்ப்பூக்களின் மேன்மையான சிறப்பு மிக்க தாழையின் வெண்மையான விரிந்த இதழ்களின் நறுமணத்தையும் முழுமையாகச் சேர்த்துக் கொண்ட தென்றலானது சாளரத்தின் வழியே நுழைந்தது. இந்தத் தென்றல் கோவலனையும் கண்ணகியையும் தீண்டியவுடன் மிக மகிழ்ந்தார்கள். கற்பனை வளமும் கலாரசனையும் தேர்ந்த படைப்பாளியால் மட்டுமே இத்தகு கலையுணர்வுடன் தென்றலின் மென்காற்றைப் பற்றியும் மலர்களின் நறுமணத்தையும் இணைத்துக் காப்பியம் படைக்க முடியும். அத்தகு தேர்ந்த கலைநுட்பத்துடன் படைப்பாளி இளங்கோ இந்நிகழ்வைக் கண்முன்னே சித்தரித்துக் காட்டியுள்ளார்.

இதனை,

**வயற்பூ வாசம் அளைஇ அயற்பூ**

**மேதகு தாழை விரியல்வெண் தோட்டுக்**
**கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்**
**தாதுதேர்ந் துண்டு மாதர்வாள் முகத்துப்**

**புரிகுழல் அளகத்துப் புகல்ஏக் கற்றுத்” [3]**

இவ்வாறு இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

**பாரதிதாசனின் கலைத்திறம்**

பாரதிதாசனும் இளங்கோவடிகளைப் போன்று கலையுள்ளமும் கற்பனை வளமும் மிகுந்தவர். அழகையும் கலையையும் அப்படியே உள்வாங்கி அதனைத் தமது எழுத்தின் வழி வெளிப்படுத்தும் ஆற்றல் மிகுந்தவர். சராசரி மனிதன் கடலோரமாக உலாவிக் கொண்டு இருக்கிறான். கடல் அலையும் அதன் மேல் குவிந்து இருக்கக் கூடிய நீலவானத்தையும் பார்க்கும் பொழுது அதன் அழகில் யாராக இருந்தாலும் மனம் ஒன்றிவிடும். கடல் அலையின் ஒலி செவிகளில் விழும். அந்தக் கடலின் காட்சியும் சப்தங்களும் செவிகளில் விழும்போது உணர்ச்சி வயப்பட இயலும். ஆனால் கவிஞன் அந்தக் காட்சியைக் காணும்போது அக்கடலின் அழகில் மயங்கி அவன் உள்ளத்தைப் பறிகொடுக்கிறான். இந்த அழகிய காட்சியை கவிஞனின் உள்ளம் ஊடுருவி நோக்கும். கவிஞனின் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் அற்புதக் காட்சியே நல்லதொரு கவிதையாக மலருகிறது. அத்தகைய நிலையில் பாரதிதாசன் இருக்கிறார்.

**”கடல் நீரும் நீலவானும்**
**கோகோக்கும் அதற்கி தற்கும்**
**இடையிலே கிடக்கும் வெள்ளம்**
**எழில் வீணை! அவ்வீணை மேல்**
**அடிக்கின்ற காற்றோ வீணை**

**நரம்பினை அசைத்தின் பத்தை**

**வடிக்கின்ற புலவன்! தம்பி**

**வண்கடல் பண்பா டல்கேள்!” [4]**

இவ்வாறு பாரதிதாசனின் கலைத்திறம் வெளிப்படுகிறது. இளங்கோவடிகள் கோவலனும் கண்ணகியும் தென்றலை நுகர்ந்து மகிழ்ந்திருந்ததைத் தம் கற்பனையில் படைத்திருந்தார். ஆனால் பாரதிதாசன் தான் கண்டுணர்ந்த கலையின் அழகைத் தனது உள்ளத்தின் வாயிலாக அப்படியே பிரதிபலித்திருப்பதை உணர முடிகிறது.

**மாதவியின் நடனக் கலைச் சிறப்பு**

நடனம் என்பது சிறந்த உடற்பயிற்சியாகும். மனத்தையும் உடலையும் புத்துணர்வாக வைத்திருப்பதற்கு நடனம் சிறந்ததொரு மருந்தாக இருக்கிறது. இந்த அறிவியல் சிந்தனை அன்றே இளங்கோவடிகளுக்குக் கலைச் சிந்தனையாக உருவெடுத்திருக்கிறது. மாதவியை அழகிய நடனக்கலைஞராகத் தமது காப்பியத்தில் வெளிப்படுத்தியிருப்பார். மாதவி நடனமாடுகிறாள். அப்பொழுது குழலிசை ஒலிக்கிறது. யாழிசை, மத்தளமும் சேர்ந்து ஒலிக்கிறது. மத்தளத்தின் இசையுடன் சேர்ந்து முழவு இசையும் ஒலிக்கிறது. முழவுடன் சேர்ந்து ஆமந்திரிகையும் இசைக்கிறது. ஆமந்திரிகையுடன் முநன்கூறப்பட்ட குயிலுவக் கருவிகள் அனைத்தும் இசைக்கின்றன. மாதவி ஒவ்வொரு தாளத்திற்கும் ஏற்றவாறு இரு பற்றாக, பதினொரு பத்துடன் தேசிக் கூத்து ஆடினாள். பின்

ஒவ்வொரு அளவும் நடனத்தில் மிகாமல் ஆளத்தியிலே வைத்து மங்கலச் சொல்லுடன் சேர்த்து இசையுடன் முறைப்படி பாட்டும் கூத்துமாக அற்புதமாக மாதவி ஆடி முடித்தாள். மீண்டும் நடனத்தில் ஆறும் நாலும் நிகழ்த்திக் காட்டினாள். மட்டத்தாளம் முதலாக ஏகத்தாளம் முடிய மிகச் சிறந்தொரு நடனத்தை அரங்கேற்றினாள். இவ்வாறு பொன்னால் செய்யப்பட்ட பூங்கொடி வந்து ஆடினாள் எப்படி இருக்குமோ அதைப் போல மாதவியின் நடனம் காண்போரின் கண்களைக் கவரும் விதமாக இருந்தது. நாடக நூலில் கூறப்பட்டிருக்கும் நெறிமுறைகள் மாறாமல் அனைத்துக் கூறுபாடுகளுடன் சேர்ந்து தனது நடனக் கலைத்திறமையைப் பறைசாற்றியிருந்தாள்.

இதனை,

**"கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாம்**
**குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்**
**தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்**
**பின்வழி நின்றது முழவே முழவோடு**
**கூடிநின் றிசைத்தது ஆமந் திரிகை**
**ஆமந் திரிகையோ டந்தர மின்றிக்**
**கொட்டிரண் டுடையதோர் மண்டில மாகக்**
**கட்டிய மண்டிலம் பதினொன்று போக்கி"[5]**

இவ்வாறு மாதவியின் ஆடல்கலை குறித்து இளங்கோவடிகள் தமது சிலம்பில் குறிப்பிட்டுள்ளார்.

**நடனமும் அறிவியலும்**

நடனம் உடல் மனம் இரண்டிற்கும் புத்துணர்ச்சி தரும் அருமருந்தாகும். உடல் சரிசமமாக இயங்கும் பொழுது உடலியக்கம் சீராக இருக்கும். நடனம் உடற்பயிற்சியாக இல்லாமல் அதனுடன் கலையையும் சேர்த்துத் தமிழ்ப் பண்பாட்டில் பரதம் என்ற கலையைத் தோற்றுவித்திருந்தனர். உடற்பயிற்சியாகக் கட்டளையிட்டுச் செவ்வனே அனைவரும் இதனைப் பின்பற்ற வேண்டும் என்று கூறினால் அதனை யாரும் பின்பற்ற மாட்டார்கள். அதனால் பரதத்தை இசையுடன் சேர்த்து அழகிய கலையாகத் தமிழர்கள் வளர்த்தெடுத்திருக்கிறார்கள். கண்களுக்கும் மனதிற்கும் குளிர்ச்சியையும் இதத்தையும் தருகின்ற அருமருந்தாக பரதம் திகழ்வதில் வியப்பேதுமில்லை. தமிழன் அறிவியலை ஆரம்பத்திலிருந்தே கண்டறிந்திருக்கிறான் என்பதைச் சிலம்பிலிருந்து உணர முடிகிறது. தமிழ்மொழியிலிருக்கும் எண்ணற்ற இலக்கியங்களில் முன்னோர் கூறிய கூற்றுக்கள் அனைத்தையும் உற்று நோக்கினால் அறிவியல் சிந்தனைகள் புதைந்திருப்பதை உணர முடியும்.

**முடிவுரை**

தமிழன் கலையில் தேர்ந்திருக்கிறான் என்பதைச் சிலம்பில் கூறப்பட்டிருக்கிற ஏழடுக்கு மாளிகையை அமைத்து வாழ்ந்திருப்பதிலிருந்து அறிய முடிகிறது. நவீன அறிவியல் வளர்ச்சி முற்றுப் பெற்றிடாத காலத்திலேயே ஏழடுக்கு மாளிகை அமைப்பது மிகுந்த கடினமான செயலாகும். ஆனால் தமிழன் அதைச் சிந்தித்து மதியைப் பயன்படுத்தி கட்டிடக் கலையில் புது யுக்தியையும் அறிவியல் சிந்தனையையும் புகுத்தியிருக்கிறான். தென்றல் காற்று நுழைவதற்கு ஏதுவாகச் சாளரங்களையும் நிலா முற்றங்களையும் அன்றே அமைத்திருக்கிறான். தூய்மையான காற்றைச் சுவாசித்தால் மட்டுமே நீண்ட ஆயுளுடன் இருக்க முடியும் என்பதற்கேற்பச் சாளரங்கள் அமைத்திருந்த பாங்கினை அறிய முடிகிறது. நடனமும் சிறந்த உடற்பயிற்சியே என்ற கருத்தை மாதவியின் ஆடல்கலை உணர்த்துகிறது. ஆடல்கலையுடன் அறிவியல் சிந்தனையையும் தமிழர்கள் போற்றியிருந்திருக்கிறார்கள். மலர்களின் சுகந்தம் இதயத்திற்கு வலுவைத் தரும். அதனால் மலர்களை அணிவது அறவியல் பூர்வமாக உடலுக்கு

நன்மையைத் தரும். அதற்கேற்ப மலர்களிடமிருந்து வீசிய சுகந்தத்தைக் கோவலனும் கண்ணியும் அனுபவித்தார்கள் என்ற கூற்றிலிருந்து அறிவியல் உண்மையை உணர முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம், களவியல்-நூற்பா-1038 -பக்-402
2. சிலப்பதிகாரம்-புகார்க்காண்டம்-மனையறம்படுத்தகாதை பக்-48
3. சிலப்பதிகாரம்-புகார்க்காண்டம்-மனையறம்படுத்தகாதை பக்-48
4. பாரதிதாசன்-அழகின் சிரிப்பு, 1971 பக்-8
5. சிலப்பதிகாரம்-புகார்க்காண்டம்-அரங்கேற்றுகாதை-பக்-66

**பார்வை நூல்கள்**


1. தொல்காப்பியம் தெளிவுரை-முனைவர் ச.வேசுப்ரமணியன்
2. சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும்-பேராசிரியர் ஜெயஸ்ரீசந்திரன்
3. இலக்கியத் திறனாய்வியல்-டாக்டர் தா.ஏ.சானமூர்த்தி


திறவுச்சொற்கள்

1. சிலம்பு
2. ஆடல் கலை
3. ஏழடுக்கு மாளிகை
4. கலைத்திறம்
5. நிலா முற்றம்